**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**A041 இலக்கிய வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சொல்வளத்தில் கிரேக்கம் இலத்தினை விட சிறந்த மொழி தமிழ் என்று கூறியவர் யார்?
2. எட்டுத்தொகையின் அகப்புற நூலைக் குறிப்பிடுக?
3. பொருநராற்றுப்படையின் ஆசிரியர் யார்?
4. திரிகடுகத்தில் கூறப்பட்டுள்ள மருந்துப்பொருட்களைக் கூறுக?
5. மணிமேகலைக்கு ஆபுத்திரன் கதையை எடுத்துரைத்தவர் யார்?
6. திருமூலர் தமிழகத்திற்கு வந்த நோக்கம் என்ன?
7. ஆதி உலா என்று வழங்கப்படும் நூல் எது?
8. யாப்பருங்கலக் காரிகையின் ஆசிரியர் யார்?
9. கலிங்கம் என்ற சொல்லின் பொருள் என்ன?
10. முந்நீர் என்பது எதைக் குறிக்கின்றது?
11. கச்சிக்கலம்பகத்தின் ஆசிரியரைக் குறிப்பிடுக?
12. கமலை ஞானப்பிரகாசரின் இயற்பெயர் யாது?
13. பிரபோத சந்திரோதயம் என்ற வடமொழி நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
14. கவிராட்சதர் என்று அழைக்கப்படுவரைக் குறிப்பிடுக?
15. எழுத்துச் சீர்திருத்தத்தை முதலில் நடைமுறைப் படுத்தியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. பட்டினப்பாலை சிறு குறிப்பு வரைக?
2. திருக்கைலாய ஞான உலா பற்றி விவரி?
3. மதுரகவியாழ்வாரின் படைப்புகளைத் தொகுத்தெழுதுக?
4. கல்லாடம் என்றால் என்ன?
5. புறப்பொருள் வெண்பாமாலை நூலமைப்பினை எழுதுக?
6. மணிப்பிரவாள நடை குறித்து எழுதுக?
7. எழுத்துக்காலக் கவிஞர்களைக் குறிப்பிடுக?
8. சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் தூரன் அவர்களின் பங்களிப்பினை விவரிக்க?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பத்துப்பாட்டு நூல்கள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) இரட்டைக்காப்பியங்களை விவரிக்க?

2. (அ) பத்தாம் நூற்றாண்டின் சைவ இலக்கியங்களை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) பதிமூன்றாம் நூற்றாண்டு இலக்கிய உரைநூல்களை விவரி.

3. (அ) சிற்றிலக்கியங்கள் குறித்து கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்தெழுதுக.

✱✱✱